பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

01 11 2025 SATURDAY 6.30 PM

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- ”ஆரோக்கியமான பெண்கள் – வலிமையான குடும்பம்” இயக்கம் மூன்று கின்னஸ் உலக சாதனைகளை படைத்திருப்பது பாராட்டுதலுக்குரியது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- ஆட்சி முறை, ராணுவம், கட்டிடக்கலை, இலக்கியம் உள்ளிட்ட அனைத்திலும் சிறந்து விளங்கிய மாமன்னர் ராஜராஜசோழனின் வரலாற்று பெருமைகளை போற்றுவோம் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

- தமிழகத்தில் நெல் கொள்முதல் பணிகள் துரிதமாக நடைபெற்று வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

- திமுக தேர்தல் வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை என்று பிஜேபி கூறியுள்ளது.

- இந்திய டென்னிஸ் வீரர் ரோஹன் போபண்ணா சர்வதேச போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

"ஆரோக்கியமான பெண்கள் – வலிமையான குடும்பம்" இயக்கம் மூன்று கின்னஸ் உலக சாதனைகளை படைத்திருப்பது பாராட்டுதலுக்குரியது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் இன்று அவர் வெளியிட்டுள்ள பதிவில், இத்தகைய மக்கள் நலத்திட்டங்கள் மூலம் நாட்டில் பெண்களின் வாழ்வாதாரம் மேம்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

பெண்களுக்கு அதிகாரமளித்தல் என்ற இலக்கை எட்டுவதற்கு இத்திட்டங்கள் வழிவகை செய்துள்ளதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதனிடையே, "ஆரோக்கியமான பெண்கள் – வலிமையான குடும்பம் " இயக்கத்தின்கீழ், ஒரு மாதத்தில் 3 கோடியே 21 லட்சம் பெண்கள் பதிவு செய்தது உள்ளிட்ட மூன்று உலக சாதனைகள் படைக்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

ஆட்சி முறை, ராணுவம், கட்டிடக்கலை, இலக்கியம் உள்ளிட்ட அனைத்திலும் சிறந்து விளங்கிய மாமன்னர் ராஜராஜசோழனின் வரலாற்று பெருமைகளை போற்றுவோம் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

ராஜராஜ சோழனின் ஆயிரத்து 40-ஆவது ஆண்டு சதய விழா கொண்டாடப்படுவதையொட்டி இன்று அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், சோழ மரபின் பொற்காலம் என்று போற்றப்படும் வகையிலான ஆட்சியை வழங்கியவர் அவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழர்களின் கட்டிடக்கலைக்கு சான்றாக உலகமே வியந்து பார்க்கும் தஞ்சை பெருவுடையார் கோவிலை கட்டியவர் மாமன்னர் ராஜராஜ சோழன் என்று டாக்டர் எல். முருகன் புகழாரம் சூட்டியுள்ளார்.

முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், தமிழர்களின் பெருமையாக ராஜராஜ சோழன் விட்டுச்சென்றுள்ள பங்களிப்புகளை வரும் தலைமுறையினருக்கு எடுத்துக்கூறுவோம் என்று கூறியுள்ளார்.

தமிழர்களின் கலை திறன், போர் திறன், பாசன முறை என அனைத்திலும் உச்சமாக ஆட்சி செய்தவர் திரு ராஜராஜ சோழன் என்று திரு மு.க.ஸ்டாலின் புகழாரம் சூட்டியுள்ளார்.

<<<<<<<>>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி வசூல் கடந்த மாதம் ஒரு லட்சத்து 95 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

சரக்கு மற்றும் சேவை வரியை அரசு குறைத்துள்ள போதிலும், கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தைவிட, வரி வசூல் நான்கு புள்ளி ஆறு சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் சரக்கு மற்றும் சேவை வரி வசூல் ஒரு லட்சத்து 87 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்தது.

<<<<<<>>>>>>

நெல்லை மாவட்டம் பாபநாசம் மற்றும் மணிமுத்தாறு அணைகளிலிருந்து பிசான பருவ சாகுபடிக்காக தண்ணீரை சட்டப்பேரவைத் தலைவர் திரு அப்பாவு இன்று திறந்துவைத்தார்.

இதன்மூலம், நெல்லை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள 86 ஆயிரத்து 107 ஏக்கர் நிலங்கள் பாசனவசதி பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் தேதிவரை 151 நாட்களுக்கு இந்த தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

இதனைத்தொடர்ந்து, மணிமுத்தாறு அணைப்பகுதியில் சுற்றுலாத்துறை சார்பில் 3 கோடியே 59 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சாகச சுற்றுலாத்தல மேம்பாட்டுபணிக்கு திரு அப்பாவு இன்று அடிக்கல் நாட்டினார்.

<<<<<<>>>>>>

கிராமங்கள் வளர்ச்சியடைந்தால்தான் நாடு வளர்ச்சியடையும் என்று சட்டப்பேரவை துணைத்தலைவர் திரு பிச்சாண்டி தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம் சீலப்பந்தல் ஊராட்சியில் இன்று நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் பங்கேற்று பேசிய அவர், மக்களின் தேவைகளை அறிந்து நிறைவேற்றவே இதுபோன்ற கிராம சபை கூட்டங்கள் நடத்தப்பட்டு வருவதாக கூறினார்.

பெண்கள் பொருளாதாரத்தில் வளர்ச்சிடைய வேண்டும் என்பதற்காக மாநில அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக திரு பிச்சாண்டி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

தமிழகத்தில் நெல் கொள்முதல் பணிகள் துரிதமாக நடைபெற்று வருவதாக மாநில உணவு அமைச்சர் திரு சக்ரபாணி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த செப்டம்பர் ஒன்றாம் தேதியிலிருந்து, நேற்றுவரை சுமார் 12 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நெல் போக்குவரத்து, ஒப்பந்த விதிகளின்படி முறையாக

செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் திரு சக்ரபாணி குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

திமுக தேர்தல் வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

தஞ்சையில், இன்று மாமன்னர் ராஜராஜ சோழனின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திமுக அரசின் எஞ்சிய நாட்களில் என்ன செய்யப்போகிறது என்று கேள்வி எழுப்பினார்.

தேசிய ஜனநாயக கூட்டணி தலைமையில் மாநிலத்தில் ஆட்சி மாற்றம் ஏற்படும் என்று திரு நயினார் நாகேந்திரன் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

கோவை மாவட்டம் வால்பாறைக்கு செல்லும் சுற்றுலா வாகனங்களுக்கு இன்று முதல் இ-பாஸ் நடைமுறை அமலுக்கு வந்துள்ளது.

சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுப்படி இது நடைமுறைக்கு வந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte – ஹரிஹரன் – 36 Sec. )*

<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

கன்னியாகுமரி மாவட்டம் தாய் தமிழகத்துடன் இன்று இணைந்த நாளையொட்டி, அதற்காக போராடிய மார்ஷல் நேசமணி சிலைக்கு, நாகர்கோவிலில் பால்வளத்துறை அமைச்சர் திரு மனோ தங்கராஜ் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

-----------------

மதுரை மாவட்டம் கோச்சடை அருகில் அவனியாபுரம் கால்வாய் தூர்வாரப்படும் பணிகளை மாநில அமைச்சர் திரு மூர்த்தி இன்று பார்வையிட்டார்.

-----------------

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் நீரில் மூழ்கி உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு 3 லட்சம் ரூபாய்க்கான நிவாரண உதவியை மாநில அமைச்சர் திரு மதிவேந்தன் இன்று வழங்கினார்.

---------------

திருவாரூர் மாவட்டத்தில் குறுவை சாகுபடியில் இரண்டரை லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு மோகனசந்திரன் தெரிவித்துள்ளார்.

---------------------

காஞ்சிபுரம் மாவட்டம் கம்பராஜபுரம் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் பங்கேற்ற ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தூய்மைப் பணியாளர்களை கௌரவித்தார்.

------------------

கோவையில் இந்திய தர நிர்ணய அமைப்பின் சார்பில் விழிப்புணர்வு மாரத்தான் இன்று நடைபெற்றது.

----------------

அகில பாரதிய ஆதிவேசன மாநாட்டையொட்டி, கோவை மாவட்டம் போத்தனூர் ரயில் நிலையத்தில் வரும் 7-ஆம் தேதிமுதல் கன்னியாகுமரி – பெங்களூரு விரைவு ரயில் நின்று செல்லும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

------------

தருமபுரி மாவட்டத்தில் தேசிய ஒற்றுமை பேரணி இன்று நடைபெற்றது.

---------------------

ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு சேலம், நாமக்கல் மாவட்டங்களில் இன்று பேரணிகள் நடைபெற்றன.

----------------

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே பெருந்தோட்டம் ஏரியில் மக்களின் கோரிக்கையை ஏற்று ஆகாய தாமரைகள் அகற்றும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

-------------------

கரூர் மாவட்டம் தென்னிலை அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் 3 வடமாநில தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்திய டென்னிஸ் வீரர் ரோஹன் போபண்ணா சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

டென்னிஸ் உலகின் இரட்டையர் பிரிவில் தலைசிறந்து விளங்கிய ரோஹன் போபண்ணா, ஆஸ்திரேலியா ஓபன் இரட்டையர் பிரிவு மற்றும் பிரெஞ்ச் ஓபன் கலப்பு இரட்டையர் பிரிவு என இரண்டு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார்.

கடந்த ஆண்டு இரட்டையர் பிரிவில் உலகத்தரவரிசை பட்டியலில் ரோஹன் போபண்ணா முதலிடம் வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

--------

உலகக்கோப்பை பாரா துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா ஒரு தங்கம் மற்றும் ஒரு வெள்ளிப்பதக்கத்தை வென்றுள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்டின் Al Ain-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் கலப்பு 50 மீட்டர் பிரிவில் ஆகாஷ் தங்கப்பதக்கத்தையும், சந்தீப்குமார் வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

-------------

தென்னாப்பிரிக்க ஏ அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இன்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேர இறுதியில் இந்தியா ஏ அணி இரண்டாவது இன்னிங்சில் 4 விக்கெட் இழப்பிற்கு 119 ரன் எடுத்துள்ளது.

பெங்களூருவில் நடைபெற்று வரும் இப்போட்டியில், இந்தியா ஏ அணி வெற்றி பெற 275 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தென்னாப்பிரிக்க ஏ அணி முதல் இன்னிங்ஸில் 309 ரன்னும், இரண்டாவது இன்னிங்சில 199 ரன்னும் எடுத்துள்ளது.

இந்தியா ஏ அணி முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 234 ரன்

<<<<<<<END>>>>>